## நகராட்சி நிருவாகத் துறை சார்பில்

# ரூ.2732.77 கோடியில் முடிவுற்ற திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்!




சென்னை, மார்ச் 5 –

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.3.2026) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 1404.27 கோடி ரூபாய் செலவில் 6 முடிவுற்ற பணிகளையும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 529.54 கோடி ரூபாய் செலவில் 16 முடிவுற்ற பணிகளையும், நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் 349.76 கோடி ரூபாய் செலவில் 93 முடிவுற்ற பணிகளையும், பேரூராட்சிகள் இயக்குநரகத்தின் சார்பில் 389.93 கோடி ரூபாய் செலவில் 76 முடிவுற்ற பணிகளையும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 59.27 கோடி ரூபாய் செலவில் முடிவுற்ற 38 பணிகளையும் திறந்து வைத்தார். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 27.59 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 9 புதிய திட்டப் பணிகளுக்கும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 495.29 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 2 புதிய திட்டப் பணிகளுக்கும், நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் 132.48 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 8 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் முடிவுற்ற கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த குடிநீர் குறைதீர்வு மையம் தொடங்கி வைத்தல்**

தஞ்சாவூர் மாவட்டம் – பாபநாசம் மற்றும் அம்மாபேட்டை ஒன்றியங்களை சார்ந்த 252 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர், திருவையாறு, தஞ்சாவூர் ஒன்றியங்களை சார்ந்த 214 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டங்கள்;

கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சி, அண்ணாமலை நகர் பேரூராட்சி, குமராட்சி, பரங்கிப்பேட்டை ஒன்றியங்களை சார்ந்த 36 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டங்கள்;

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் ஒன்றியத்தை சார்ந்த தேவியகரம் மற்றும் 3 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டங்கள்.

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி, களக்காடு, பாளையங்கோட்டை, நாங்குநேரி, வள்ளியூர், இராதாபுரம் ஒன்றியங்களை சார்ந்த 831 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டங்கள்;

4 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த குடிநீர் குறைதீர்வு மையம் – "புனல் 1916";.

என மொத்தம் 1404 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் 5 கூட்டுக்குடிநீர் திட்டங்கள் மற்றும் புனல் – 1916 ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தல்**

**குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள்**

148 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் மணலி மண்டலம் (மணலி, சின்னசேக்காடு), சோழிங்கநல்லூர் மண்டலம், நீலாங்கரை – கபாலீஸ்வரர் நகர், ராஜா நகர் மற்றும் கண்ணகி நகர் (தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகள்), பழைய மகாபலிபுரம் சாலை மற்றும் 200 அடி ரேடியல் சாலையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கல் திட்டம் மற்றும் பெருங்குடியில் நாளொன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட நீர் சுத்திகரிப்பு நிலையம்;

44 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கண்ணன்கோட்டை தேர்வாய் கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து புழல் நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு குடிநீர் குழாய்கள் பதித்து உந்து செய்யும் பணிகள் மற்றும் அம்பத்தூர் மண்டலத்தில் புதிய கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள்;

**பாதாள சாக்கடை திட்டப்பணிகள்**

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், 106 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில் தண்டையார்பேட்டை, இராயபுரம், வி.க நகர் மண்டலங்களில் உள்ள பல்வேறு கழிவுநீர் உந்து நிலையங்களை மேம்படுத்தும் / வலுவூட்டும் பணிகள் (பகுதி);

அம்பத்தூர் மண்டலம், கொரட்டூர் கழிவுநீரகற்று நிலையத்தில் 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் துர்நாற்ற கட்டுப்பாட்டு அமைப்பு.

ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் கழிவுநீர் குழாய்களை 19 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் விரிவாக்கும் பணிகள்;

வளசரவாக்கம் மண்டலம் (காரம்பாக்கம்) பெருங்குடி மண்டலம் (ஜல்லடியான்பேட்டை – ராகவேந்திரா காலனி, சாய் கணேஷ் நகர் மற்றும் ஜெயசந்திரன் நகர்), சோழிங்கநல்லூர் (உத்தண்டி – இராஜாஜி சாலை, ஜீவரத்தினம் தெரு) ஆகிய பகுதிகளில் 141 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் பாதாள சாக்கடைத் திட்டம்;

64 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் அடையாறு மண்டலம், எல்.ஐ.சி காலனி கழிவுநீரிறைக்கும் நிலையத்திலிருந்து பெருங்குடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் வரை பிரதான கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் பெருங்குடி மண்டலம், நாளொன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மூன்றாம் நிலை நுண் வடிகட்டி சுத்திகரிப்பு நிலையம் (TTUF);

என மொத்தம் 529 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 16 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**நகராட்சி நிருவாக இயக்குநரகம் சார்பில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்**

ஆவடி, ஒசூர், சேலம், திருப்பூர், கும்பகோணம் ஆகிய மாநகராட்சிகளில், 97.87 கோடி ரூபாய் செலவில், முதல்வர் படைப்பகங்கள், நகர்புற சுகாதார துணை மையங்கள், பள்ளிக் கட்டடங்கள், அங்கன்வாடி மையங்கள், உடற்பயிற்சிக் கூடங்கள், விளையாட்டு மைதானங்கள், ஏரியை மேம்படுத்துதல், பேருந்து நிலையங்கள், அறிவியல் பூங்காக்கள், குடிநீர் விநியோக மேம்படுத்தும் திட்டப்பணிகள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட பணிகள்;

மதுராந்தகம், திருவள்ளூர், வானூர், பெரம்பலூர், அறந்தாங்கி, அரியலூர், கடையநல்லூர், அம்பாசமுத்திரம், விளவங்கோடு, பத்மனாபபுரம், அருப்புக்கோட்டை, கன்னியாகுமரி, திருச்செந்தூர், வெள்ளகோவில், சத்தியமங்கலம், உதகமண்டலம், மேட்டுப்பாளையம், அவிநாசி, பவானிசாகர், குன்னூர், மேட்டுப்பாளையம், இராமநாதபுரம், மேட்டூர், குமாரபாளையம், குளித்தலை, சங்ககிரி, ஆத்தூர் ஆகிய நகராட்சிகளில் 251.89 கோடி ரூபாய் செலவில் நவீன பேருந்து நிலையங்கள், வகுப்பறைகள், நகராட்சி அலுவலகங்கள், குடிநீர் மேம்பாட்டு பணிகள், சுகாதார நிலையங்கள், அறிவுசார் மையங்கள், தினசரி சந்தைகள், குடிநீர் அபிவிருத்தி பணிகள், வணிக வளாகங்கள், புதிய பூங்காக்கள், அங்கன்வாடி மையங்கள்;

என மொத்தம் 349 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் 93 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பேரூராட்சிகளின் இயக்குநரகத்தில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்**

தென்திருப்பேரை, கடம்பூர், சாத்தான்குளம், பூலாம்பட்டி, ஏத்தாப்பூர், ஜலகண்டபுரம், கெங்கவல்லி, தெடாவூர், சேந்தமங்கலம், மோகனூர், எருமப்பட்டி, ஒத்தக்கால் மண்டபம், கண்ணம்பாளையம், சர்க்கார் சாமக்குளம், இருகூர், செட்டிபாளையம், வெள்ளலூர், பள்ளபாளையம், பழைய ஜெயங்கொண்டசோழபுரம், ஆரணி, மேலச்சொக்கநாதபுரம், தென்கரை, கலவை, திமிரி, நெமிலி, பனப்பாக்கம், விளாப்பாக்கம், அயோத்தியாப்பட்டணம், மல்லூர், கொளத்தூர், சீராப்பள்ளி, நாமகிரிப்பேட்டை, வேடசந்தூர், எரியோடு, பண்ணைக்காடு, மணலூர்பேட்டை, வடக்கு வள்ளியூர், கோபாலசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, ஆழ்வார்குறிச்சி, கழுகுமலை, ஜம்பை, சிவகிரி, கொளப்பலூர், புவனகிரி, லால்பேட்டை, நாகோஜனஅள்ளி, ஜமீன் ஊத்துக்குளி, அரகண்டநல்லூர், தேவர் சோலை ஆகிய பேரூராட்சிகளில் உள்ள புதிய அலுவலகக் கட்டடங்கள், வாரந்திர சந்தைகள், ஆரம்ப சுகாதார துணை நிலையங்கள், பாலங்கள், அங்கன்வாடிகள், நூலகங்கள், வகுப்பறைகள், சமூகநலக் கூடங்கள், நவீன பேருந்து நிலையம், புதிய திருமண மண்டபம், குடிநீர் விநியோக திட்டப்பணிகள்;

என மொத்தம் 389.93 கோடி ரூபாய் செலவில் 76 முடிவுற்ற திட்டப்பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்**

திருவொற்றியூர், மணலி, மாதவரம், தண்டையார்பேட்டை, இராயபுரம் அம்பத்தூர், அண்ணாநகர், கோடம்பாக்கம், வளசரவாக்கம், பெருங்குடி, சோழிங்கநல்லூர் ஆகிய மண்டலங்களில் புதிய அங்கன்வாடி மையங்கள், உடற்பயிற்சி கூடங்கள், சமூக சுகாதார மையங்கள், வகுப்பறைகள், பல்நோக்கு மண்டபங்கள், பல்நோக்கு கட்டடங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், தகன மேடைகள், புதிய அங்கன்வாடி மையங்கள், கால்பந்து மைதானம் மற்றும் இறகுப் பந்தாட்ட மைதானம், சமூகக் கூடம், ஆரம்ப /நடுநிலைப் பள்ளி கட்டடங்கள், செல்ல பிராணிகள் சிகிச்சை மையங்கள் உள்ளிட்ட பணிகள்;

என மொத்தம் 59.27 கோடி ரூபாய் செலவில் 38 முடிவுற்ற திட்டப்பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

மணலி, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் வெள்ள நிவராண மையங்கள், பல்நோக்கு மண்டபங்கள், பொது கழிப்பறை கட்டடங்கள், உள் விளையாட்டு அரங்கம், பாலங்கள், மற்றும் மண்டல அலுவலகம் கட்டும் பணிகள், என மொத்தம் 27.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9 புதிய திட்டப்பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் புதிய திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்.**

கலப்பின வருடாந்திர மாதிரியின் (HAM) கீழ், 392 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், முதற்கட்டமாக அனைத்து மண்டலங்களில் உள்ள வணிக நிறுவனங்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு கட்டடங்களில் 1 இலட்சம் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய குடிநீர் அளவுமானிகளை (Smart Meters) பொருத்தும் பணிகள்;

கொடுங்கையூரில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர் சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை (TTRO) 102 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பொது தனியார் பங்களிப்பு முறையில் (PPP mode) புதுப்பிக்கும் பணிகள்;

என மொத்தம் 495.29 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 2 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**நகராட்சி நிருவாக இயக்குநரகம் சார்பில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

தஞ்சாவூர், திருநெல்வேலி, கும்ப கோணம் மாநகராட்சிகள் மற்றும் திருவள்ளூர், மேட்டுப்பாளையம், குமாரபாளையம் ஆகிய நகராட்சிகளில் வணிக வளாகங்கள், பேருந்து நிலையம் விரிவாக்கம், குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணிகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், உயிரியல் சுரங்கம் (BioMining), ஆழ்துளை கிணறுகள், திடக்கழிவு சுத்திகரிப்பு நிலையம், அரசு மேல்நிலை பள்ளியில் சுற்றுச்சுவர் கட்டும் பணிகள்;

என மொத்தம் 132.48 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 8 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் தேனாம்பேட்டை மண்டலம், லூப் சாலைக்கு "சிந்தனை சிற்பி சிங்காரவேலர் சாலை" என்று பெயர் சூட்டப்பட்டு பெயர் பலகை திறந்து வைத்தல்**

இந்திய சுதந்திர போராட்ட வீரர், 1923 ஆம் ஆண்டு இந்தியாவில் முதல் முறையாக சென்னையில் மே தினம் கொண்டாடியவர், பொதுவுடைமைச் சிந்தனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் மகத்தான பணிகளுக்காகச் "சிந்தனைச் சிற்பி" என்று போற்றப்பட்டவர், தொழிலாளர்கள் நலனுக்காகத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டவர், சுயமரியாதை, சமதர்மக் கொள்கையில் தளராத உறுதி கொண்டவராகவும் வாழ்ந்த மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்த சிங்காரவேலர் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில் தேனாம்பேட்டை மண்டலம், லூப் சாலைக்கு "சிந்தனை சிற்பி சிங்காரவேலர் சாலை" எனப் பெயர் சூட்டப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், நகராட்சி நிர்வாக இயக்குநர் பி.மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், பேரூராட்சிகளின் இயக்குநர் எம். பிரதீப் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மாமன்ற உறுப்பினர் திருமதி ரேவதி, சிங்காரவேலர் அவர்களின் வாரிசுதாரர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.3.2026) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறையின் சார்பில், சென்னை, கிண்டியில் 37 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சுற்றுச்சூழல் பூங்காவின் முதற்கட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, சென்னை கலைஞர் நூற்றாண்டுப் பூங்காவில் இந்தியாவிலேயே முதன் முறையாக 11 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 30 மீட்டர் உயர செங்குத்துத் தோட்டத்துடன், 9 அடுக்குகளைக் கொண்ட உலகத்தரத்திலான Super Tree Tower என்னும் "உயர் கோபுர மரத்தினை திறந்து வைத்தார்.

# ரூ. 37.85 கோடியில் கிண்டி சுற்றுச்சூழல் பூங்கா!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, மார்ச் 5 –

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.3.2026) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறையின் சார்பில் சென்னையின் மையப்பகுதியான கிண்டி சுற்றுச்சூழல் பூங்காவை பெரியவர்கள், குழந்தைகள் அனைவரின் மனதை மகிழ்விக்கும் வகையில், கருத்தியல் தோட்டங்கள், குழந்தைகள் விளையாடும் திடல்கள், பறவைத் திட்டுகள், நீரியல் தோட்டம், புல்வெளிகள், காட்சி மேடைகள், நிழல் நடைபாதைகள் போன்ற கட்டமைப்புகளுடன் 37 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள முதற்கட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், சென்னை கலைஞர் நூற்றாண்டுப் பூங்காவில் இந்தியாவிலேயே முதன் முறையாக 11 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 30 மீட்டர் உயர செங்குத்துத் தோட்டத்துடன், 9 அடுக்குகளைக் கொண்ட உலகத்தரத்திலான Super Tree Tower என்னும் **"உயர் கோபுர மரத்தினை"** திறந்து வைத்து, தமிழ்நாட்டில் வனங்கள் மற்றும் மரங்களால் சூழப்பட்டுள்ள பரப்பினை 33 சதவீதமாக மாற்றும் குறிக்கோளினை அடையும் வகையில் **'தமிழ்நாடு வேளாண் காடுகள் வளர்ப்புக் கொள்கை 2026'** வெளியிட்டார்.

**கிண்டி, சுற்றுச்சூழல் பூங்காவின் முதற்கட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

சென்னையின் மையப்பகுதியான கிண்டியில் தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிலம் தனியாரிடமிருந்து நீண்ட சட்டப்போராட்டத்திற்குப்பிறகு மீட்கப்பட்டு, 118 ஏக்கர் நிலம் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறைக்கு ஒப்படைக்கப்பட்டது. இவ்விடத்தில் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்படும் என தமிழ்நாடு அரசால் அறிவிப்பு செய்யப்பட்டதைத் தொடர்ந்து மழைநீரை சேகரிக்கும் வகையிலும், சென்னையின் மையப்பகுதியை பெரும் வெள்ளத்திலிருந்து பாதுகாக்கும் வகையிலும், பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் நான்கு குளங்கள் அமைக்கப்பட்டன. இங்கு அமைத்துள்ள நீர்நிலைகளின் கரைகளை சீரமைக்கும் பணிகள், அரியவகை மரங்கள், அழகிய மலர்ச் செடிகள் நடவு செய்தல் மற்றும் நாற்றங்கால் பணிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப்பூங்காவில், கருத்தைக் கவரும் கருத்தியல் தோட்டங்கள், குழந்தைகள் குதூகலித்திட விளையாட்டுத்திடல்கள், பறவைகள் விளையாடிட பறவைத் திட்டுகள், கண்கவர் நீரியல் தோட்டம், பசுமையான புல்வெளிகள், இயற்கையோடு இயைந்த அடர்வனம், பூங்காவை முழுமையாகக் கண்டு களித்திட காட்சி மேடைகள், மரங்கள் சூழ்ந்த, நிழலுடன் கூடிய நடைபாதைகள் போன்ற கட்டமைப்புகளுடன் 25 ஏக்கர் பரப்பில், 37 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள முதற்கட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இப்பூங்காவானது, நகரின் இயற்கைச் சூழலைப் பேணுவதுடன், காற்றின் தரத்தை மேம்படுத்தவும், பல்லுயிர் பாதுகாப்பை உறுதி செய்யவும், மழைநீர் சேகரிப்பின் மூலம் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் ஏதுவான கூறுகளைக் கொண்டு அமையவுள்ளது. மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த பொழுதுபோக்கு மையமாகவும் இயற்கையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதமாகவும் இப்பூங்கா செயல்படும்.

**திறந்து வைக்கப்பட்ட புதிய கட்டடங்களின் விவரங்கள்**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவினைப் போற்றிடவும், இயற்கையோடு இயைந்த சூழலில் கண்ணாடி மாளிகை, ஜிப்லைன், பறவையகம், இசை நீரூற்று, மரவீடு, தோட்டக்கலை அருங்காட்சியகம், பனிமூட்டப்பாதை, தொடர் கொடி வளைவுப்பாதை போன்ற பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்ட சென்னை கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா நீண்ட சட்டப் போராட்டத்திற்கு பிறகு அரசால் மீட்கப்பட்ட 6.09 ஏக்கர் நிலத்தையும் சேர்த்து 13.21 ஏக்கரில் உலகத்தரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பூங்காவிற்கு மேலும் சிறப்பூட்டும் வகையில் வான்வழிப் பார்வையில் சென்னை மாநகரின் எழிலினை பொதுமக்கள் கண்டுகளித்திட 11 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் இந்தியாவிலேயே முதன் முறையாக 30 மீட்டர் உயர செங்குத்துத் தோட்டத்துடன் அமைக்கப்பட்டுள்ள, 9 அடுக்குகளைக் கொண்ட உலகத் தரத்திலான Super Tree Tower என்னும் **"உயர் கோபுர மரத்தினை"** பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**தமிழ்நாடு வேளாண் காடுகள் வளர்ப்புக் கொள்கை வெளியீடு**

வனங்கள் மற்றும் மரங்களால் சூழப்பட்டுள்ள பரப்பினை 33 விழுக்காடாக அதிகரிப்பதற்கு தமிழ்நாடு அரசால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், மரம் மற்றும் மரம் சார்ந்த காகிதம், ஒட்டுப் பலகை, எரிசக்தி போன்ற பொருட்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. வனங்களுக்கு வெளியேயுள்ள மரங்களின் பரப்பளவை அதிகரித்து இந்த இலக்கினை அடைந்திட வேளாண் காடுகள் வளர்ப்பு முறைகள் பெருமளவு ஊக்குவிக்கப்படுகின்றன. விளைநிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரித்து, உழவர்களின் வருமானம் உயர்ந்து அவர்களின் பொருளாதாரம் மேம்படும் வகையில் உயர் மதிப்பு கொண்ட தேக்கு, சந்தனம், செம்மரம், ஈட்டி போன்ற மர இனங்களை உழவர்கள் தங்கள் வயல்களிலேயே பயிரிட்டுப் பயன்பெறவும், அதற்குத் தேவையான வனச் சட்டங்களிலுள்ள விதிகளை எளிதாக்கவும், சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் தமிழ்நாட்டின் வனப்பரப்பை 33 சதவீதமாக அதிகரித்து, பசுமை சூழ்நிலையினை உருவாக்கிடவும், நீடித்து நிலைக்கத்தக்க வேளாண் காடு வளர்ப்பில் தமிழ்நாட்டை ஒரு முன்னோடி மாநிலமாக மாற்றிடும் வகையில் **"தமிழ்நாடு வேளாண் காடுகள் வளர்ப்புக் கொள்கை 2026"** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

உயர் மதிப்பு கொண்ட மரங்களை வேளாண் நிலங்களில் வளர்ப்பது, அவற்றை வெட்டி எடுத்துச் சென்று விற்பனை செய்வதற்கான நடைமுறைகளை எளிதாக்குதல், சிறப்பு வேளாண் காடு வளர்ப்பு மண்டலங்களை ஏற்படுத்துதல், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கும் வகையில் கார்பன் சேமிப்பை அதிகரித்தல், தரிசு நிலங்களை மீள சாகுபடிக்குக் கொண்டுவருதல், தரமான மரக்கன்றுகளை உழவர்களுக்கு வழங்குதல், வனப்பொருட்கள் சார்ந்த தொழில் நிறுவனங்கள் மற்றும் பிற சந்தை இணைப்புகளை ஏற்படுத்துதல், நிலத்தடிநீர், பல்லுயிர்ப்பெருக்கம் மற்றும் சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்தல், உணவு, பசுந்தீவனம் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு, வேளாண் காடுகள் குறித்த பயிற்சி, மதிப்புக்கூட்டுதல் போன்ற பல்வேறு அம்சங்கள் **"தமிழ்நாடு வேளாண் காடுகள் வளர்ப்புக் கொள்கை 2026"**இல் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ. குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அலுவலர்கள் முன்னேற்றச் சங்கத்தின் அலுவலக திறப்பு மற்றும் கொடியேற்று விழா 4.3.2026 அன்று சேலத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமை வகித்தார். தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன், பொருளாளர் கோ.சி.வள்ளுவன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் பேரவைச் செயலாளர் ஆர்.சண்முகசுந்தரம், அச்சங்கத்தின் பொதுச்செயலாளர் அ.மு.சரவணன், தலைவர் த.சித்தார்த்தன் மற்றும் சங்க நிர்வாகிகள், அலுவலர்கள் சேலம் மண்டல போக்குவரத்து தொ.மு.ச. தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.